போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு	ரூ.	5 0 0
6 மாதம்	ரூ.	2 8 0
தனிப்பிரதி		0 1 6

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B A (Hons)

திராவிடர்
வாரத்தாள்

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 29
11—2—50 சனிக்கிழமை | வீச்சு 24

பேசாமடந்தையான பெரியவர்!

"என்ன ஆடம்பரமான வர வற்பு? திருவிழா போல ன்றோ மக்கள் திரண்டிருந் னர்? 'ஜே' கோஷத்தை இடி பாசையென எழுப்பினரே! க்கள் செய்த ஆரவாரம் கடல் லைபோல் ஒலித்ததே! வாத் ய முழக்கங்கள் விண் ட்டினவே!"

"ஊர்வலத்தில், எவ்வளவு க்கள் கூடி இருந்தனர் பார்த் ரா? அந்தப் பூந்தேர், எவ் ளவு நேர்த்தியாக இருந்தது ண்டீரா? எத்தனை மைல் நீள ர்வலம்! அப்பப்பா! எண் ம் பொழுதே, இருதயத்தில் ன்பம் பெருக்கெடுத்து ஓடு தே!"

"அப் பூந்தேரை இழுத்த ளைகள், நமது கண்களைப் த்து விட்டனவே! வழியிலே தனை எத்தனை சிறுசிறு பந் கள்! வாழ்த்துச் சொற் த் தாங்கிய பெரும் பெரும் வுகள்! மாவிலை தோரணங் கள்! அங்கங்கே, வழிநெடுக, நிறுத்தி நிறுத்தி வாசித்தளித்த வரவேற்பிதழ்கள்! என்ன வேடிக்கை! என்ன கேளிக்கை! அவர்கள் அளித்த விருந்திற்குத் தான் ஏதாவது சொட்டுச் சொல்ல முடியுமா?"

"நமக்குத் திலகமிட்டுத் தோத் தரித்து நின்றார்களே, நற்குண நங்கையர், அவர்கள் முகங் களிலே தேங்கி மின்னிக்கொண் டிருந்த எழிலைக் கண்டீரோ? நமக்குப் பூர்ண கும்ப மேந்திய பொன்னவிர் மேனியரின், அன்ன நடையழகை நோக்கினீ ரோ? மலர் தூவுகிறார்களே நமது பாதங்களில்! தொட்டுக் கண் களில் ஒத்திக் கொள்ளுகிறார் களே, நமது திருவடிகளை! நமது பாதத்தில் சாஷ்டாங்கமாகப் பணிகிறார்களே பொதுமக்கள்! நாமன்றோ நாட்டுக்குடையார்? இந்த விருதும் வரிசையும் வேறு கட்சியினருக்குக்கிடைக்குமோ? நாம் செய்த பாக்கியமே பாக்கி யம்! எல்லாம் நமது அப்பன் மகாத்மாவின் அருள்!"

"நம் கண் அசைந்தால், இந்த மக்களின் கருத்து அசை கிறதே! நாம் சுட்டுவிரல் காட்டி னதுதான் தாமதம், ஆயிரக் கணக்கில் கூடி விட்டார்களே மக்கள்! கட்டளை இட்டதும், விடுதலைப் போர்க்களம் புகக் கணக்கிலடங்காத காளைகள், துள்ளிக் குதித்துக் கிளம்பி விடு கிறார்களே! எதற்கு ஒப்பிட்டுக் கூறுவது, இவர்கள் தேச பக்தியை? வெள்ளையன் வெளி யேறுவதிலே, இந்த மக்களுக் குத்தான் என்ன ஆசை? போலீஸ் என்ன செய்யும்— பட்டாளந்தான் என்ன செய்து விடும்—இந்த மக்கள் எழுச் சியை அடக்க? இப்படை நமது சிருஷ்டி! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"

இப்படி எண்ணாத — வாய் விட்டுக்கூறாத—காங்கிரஸ் தலை வர்கள், அந்தக் காலத்தில்

இருந்திருக்க முடியாது. அன்று, காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களின் முகங்களில் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டு இருந்தது. பொதுமக்களைக் காண்பதிலே ஒரு ஆனந்தம், பொதுக் கூட்டங்களில் பேசுவதிலே ஒரு சந்தோஷம், பொது மக்களுக்குக் கட்டளைகள் பிறப்பிப்பதிலே ஒரு களிப்பு, இவ்வளவும் காங்கிரஸ் தலைவர்கள் தினம்தினம் அன்று அனுபவித்து வந்தனர். அந்தக் கட்டம் அஸ்தமித்து விட்டது. இன்று நடைபெறுகிறது, வேறு அத்தியாயம். காங்கிரஸ் தலைவர்களிடம் மகிழ்ச்சி மறைந்து விட்டது. சந்தோஷம் சரிந்து விட்டது. பொதுமக்கள் என்ற பெயர் கேட்டாலே ஒரு வெறுப்பும், அவர்களைப் பார்ப்பது என்றாலே ஒரு கசப்பும், அவர்களுடன் பேசிப்பழகுவது என்றாலே ஒரு பீதியும் கொள்ளும் நிலை, காங்கிரஸ் தலைவர்களுக்கு இன்று ஏற்பட்டு இருக்கிறது. என்ன காரணம் இதற்கு?

எதிர்க்கட்சியினர், ஆட்சி புரியும் காங்கிரஸ் தலைவர்கள் மீது, கூறிவரும் குற்றச்சாட்டுகளின் எதிரொலியாகவா, காங்கிரஸ் தலைவர்கள் என்றாலே கேலி பேசும் நிலை பிறந்திருக்கிறது? இல்லை, ஒருக்காலும் இருக்க முடியாது. எதிர்க்கட்சியினர்தம் எதிர்ப்பு முன்னணி இன்னும் விரிவாக அமையவில்லை. மேலும் சில ஆண்டுகள் செல்லும் எதிர்க்கட்சியினர் போதிய பலம்பெற. இன்று எதிர்க்கட்சியினர் செய்யும் பிரசாரம், பட்டி தொட்டிகளிலுள்ள மக்களிடமெல்லாம் தேவையான அளவு பரவி விட்டதாகச் சொல்வதிற்கில்லை. அவர்கள் எழுத்தும், குறுகிய வட்டாரத்திற்குள்ளாகவேதான் நின்று விடுகிறது. எதிர்ப்பின் பலம் சிறிய அளவாக இருந்தும் கூட காங்கிரஸ்கட்சியின் கனம்கள் கண்பிசைகிறார்கள்—கனல்கக்குகிறார்கள்—கோபிக்கிறார்கள்—கொக்கரிக்கிறார்கள்—சஞ்சலப் படுகிறார்கள்—சலிப்படைகிறார்கள்—சலசலப்புச் செய்கிறார்கள்—பொதுமக்களை சபிக்கிறார்கள்—சில பல இடங்களிலே பேசாமடந்தையராகிறார்கள்!

நுணலும் தன் வாயால் கெடும் என்றோர் வசனம் உண்டு. காங்கிரஸ் கட்சியினர் மீது, பொது மக்கள் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சிக்கெல்லாம், தக்கதோர் காரணம் உண்டு. அந்தக் காரணத்தைத் தோற்றுவித்தவர்களும் காங்கிரஸ் கட்சியினரேயாவர். வெள்ளையர் வெளியேறிவிட்டால், வெளியேறின அதே கணத்தில், ஏற்படுத்தப்படும் நல்லவர் ஆட்சி 'பூலோக சுவர்க்கமாக' இருக்கும் என்று, ஏதேதோ பிதற்றி வைத்தனர் பொது மக்களிடம்- முன்யோசனை துளியுமில்லாமல்- இந்த காங்கிரஸ் கனங்கள்! இன்று ஏற்பட்டுள்ள ஆட்சி, 'நல்லவர்' ஆட்சியாக அமைந்திராததோடு, ஒவ்வொருவருக்கும் பெரும் 'நரக' வேதனையைத் தருவதாகவும் இருப்பதை மக்கள், நாள்தோறும் சொந்தத்தில் அனுபவித்து வருகின்றனர். ஆத்திரம் பொங்குகிறது, அவர்கள் உள்ளத்தில். சிலர் வெளியே காட்டிக்கொள்ளுகின்றனர் அந்த ஆத்திரத்தை; பலர் மனதுக்குள்ளேயே மூடி வைத்திருக்கின்றனர் அதனை. எரிமலை என்று இருக்கின்றனர் அவர்கள்! பொது மக்களில், சுடுசொல் கூறும் சிலரைப்பற்றிக் கேட்டாலே, சீறும் சர்ப்பமாகிறார்களே இந்தக் காங்கிரஸ் கனம்கள், எரிமலை என இருக்கும் அவர்கள் உள்ளங்களை உணர்ந்துகொண்டால், இவர்கள் என்ன உருவை எடுப்பார்களோ, நாம் அறியோம்.

பொதுவாகக் காங்கிரஸ் தலைவர்களும், குறிப்பாகக் காங்கிரஸ்காரர்களும், இன்று பொது மக்களைக் குறித்துக் கொண்டிருக்கும் கருத்து, மிகமிக மட்டரகமானது என்பது மட்டுமல்ல, மிகமிகத் தவறானதும்கூட என்போம். பொது மக்கள், தங்களைப் போற்றிப் புகழ்ந்தபொழுதும், இனிப்பை ஈக்கள் மொய்ப்பதுபோல் தங்களைப்பொதுமக்கள் மொய்த்துக் கொண்டிருந்த பொழுதும், பொதுமக்களைக் குறித்து, இந்தக் காங்கிரஸ் கனங்கள், எந்த விதமான கருத்தைக் கொண்டிருந்தார்களோ, அதற்கு நேர் மாற்றமான கோட்பாட்டினை இன்று கொண்டிருக்கிறார்கள்.

முன்னொருநாள், தங்களால் போற்றிப் புகழப்பட்ட, மக்களின் நல்லெண்ணத்தை, இன்று பழிக்கிறார்கள், அதற்கு மாசு கற்பிக்கிறார்கள், அதனை அலட்சியம் செய்கிறார்கள். இதே நிலையில் பொதுமக்களும், காங்கிரஸ் கனம்களை, தூற்றுகிறார்கள், நிந்திக்கிறார்கள், கேலிசெய்கிறார்கள், கண்டிக்கிறார்கள், காணவும் கண் கூசுகிறார்கள், சொல் கேட்கவும் மறுக்கிறார்கள்! இந்த உறவு மாற்றத்துக்கான, அடிப்படைக்காரணத்தை காங்கிரஸ் கனங்கள் சிந்தித்துப் பார்த்து, உடனடியாக நேர் செய்துகொள்ள முனைந்தாலன்றி, இருவருக்கும் ஏற்பட்டுள்ள பிளவு விரிவாகுமேயன்றி குறுகிவிடாது. எல்லா அரசியல் கட்சிகளும் இப் பொது விதியை நினைவில் வைத்துக் கொண்டு, அரசியல் அரங்கில் தோன்றுவதுதான் முறையாகும்.

தங்களுடைய திக் விஜயங்களிலே, காங்கிரஸ் கனங்க

(11-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் விழா

வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த **திருவத்திபுரத்தில்** இவ்வாண்டு **பொங்கல் விழா** 19-1-50 அன்று துவங்கி 26-1-50 வரை **பெரியார் நகரில்** மிகச்சிறப்பான முறையில், இம்மாகாணத்தில் இதுவரை எங்கும் நடைபெறாத வகையில் நடைபெற்றது.

விழா நடைபெற்ற "**வ. உ. சி. பந்தல்**" மிகப்பெரிய அளவிலே அமைக்கப் பட்டிருந்தது. அதை அழகுபடுத்தும் வகையில் மின்சார விளக்கு அலங்காரமும், ரோட்டி விருந்து பந்தல் வரை வீதி விளக்குகள் போன்ற (Street Lights) வரிசை விளக்குகளும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

விழாப்பந்தலின் முகப்பில் உழவன் ஏர் உழுகின்ற காட்சி மிகப் பெரிய அளவில் நிழல் உருவமாகச் சித்தரிக்கப் பட்டு, அதன் கீழ் "பார் முழுதும் ஏர் முனையிலே" என்ற சொற்றொடர் எழுதப் பட்டிருந்தது. அவற்றைச் சுற்றிலும் சிறு மின்சாரக் கோவை விளக்குகள் (Series Bulbs) அமைக்கப் பட்டு அக்காட்சியை அழகு படுத்திய வண்ணம் இருந்தன. விழாப் பந்தலுக்கு எதிரில் நெடியதோர் கம்பத்தில் பறந்து கொண்டிருந்த நம் **திராவிட முன்னேற்றக் கழகக் கொடியின்** தோற்றம் இவை அத்தனையையும் விட மிகச்சிறப்புற அமைந்திருந்தது.

கண்காட்சி

இத்தனை ஆண்டு விழாக்களிலே காணாததோர் புதிய நிகழ்ச்சியாகும் இது. இதற்கென அமைக்கப் பட்டிருந்த அறைகளிலே கீழ்க்கண்ட கண்காட்சிகள் நடைபெற்றன.

வாலாசாபாத் இந்துமத பாடசாலையாரின் கைத்தொழில்களான பொத்தான் செய்தல், மரங்களினால் விளையாட்டு பொம்மை செய்தல் தறி நெய்தல் ஆகிய நிகழ்ச்சிகள்.

2. **சென்னை சர்க்கார் மீன் இலாகா**வினரால் கொண்டுவரப்பட்ட மீன் இனங்களின் கண்காட்சி.

3. **காஞ்சிபுரம் திராவிடநாடு** நிலையத்தாரின் சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கிய ஓவியங்கள்.

4. **பூந்தமல்லி** அறிஞர் திரு. வி. **கந்தசாமி** (முதலியார்) அவர்களால் எழுதப் பெற்ற பழங்காப்பிய ஓவியங்கள்.

5. **மொகஞ்சதரோ** அழிபாடுகளில் கிடைத்த திராவிட நாகரிகத்தின் சின்னங்கள்.

6. விழா நிர்வாகிகளால் நிர்மாணிக்கப்பட்ட "**விஞ்ஞானப் பிள்ளையார்**" இது விழாவிற்கு வந்திருந்த அனைவருடைய கவனத்தையும் ஈர்த்து விட்டது. இதன் அருகே மக்கள் ஒவ்வொருவராகச் சென்று கேள்விகேட்டு, தக்கபதில் பெற்று, விஞ்ஞான வளர்ச்சியினையும், பிள்ளையார் பதில் சொல்லும் திறத்தினையும் கேட்டு வியப்புற்றனர்.

இவை தவிர, விழா நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கிணங்கி மாகாண சுகாதார இலாகாவினரால் (Director Of Public Health) "பொதுச் சுகாதாரம்" சம்பந்தப் பட்ட சினிமாப் படங்கள் உள்ளூர்ச் சினிமாவில் திரையிடப்பட்டன.

பந்தல் அலங்கரிப்பு, ஒலிபெருக்கி அமைத்தல் ஆகியவைகளை நன்முறையிலே அமைத்து ஒத்துழைத்த நம் இயக்கப் பணியாளர்களான **சென்னை கணேசா ரேடியோ சர்வீஸார்** உதவியினால் விழா வெற்றிகரமாக நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள்

முதல் நாள் 19-1-50 வியாழக்கிழமை தோழர் **சி. வெ. சுப்பராயன்** அவர்கள் தலைமையில் **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்** பேசுகையில் நம் தொழிலில் நாம் வெற்றி கண்டவிழா பொங்கல் விழா—இதைக் கொண்டாட மறுக்கிறார்களே! இந்தப் பேதைமையை என்னவென்று சொல்வது! என்று குறிப்பிட்டுவிட்டு பெண்களால்தான் நம் நாட்டைச் சீர்திருத்த முடியுமென்றும், பெண்கள் யாவரும் மூடநம்பிக்கையை ஒழித்து முன்னேற்றமடைய வேண்டுமென்றும் பேசினார்கள்.

அடுத்தபடியாகப் பேசிய தோழியர் **சத்தியவாணிமுத்து** அவர்கள் நம் மாகாண மந்திரிகளின் ஊதாரிச் செலவுகளைக் கண்டித்துவிட்டு, குழந்தைகள் அதிகமாகப் பிறந்து விட்டன. அவைகளைக் காப்பாற்ற போதிய உணவில்லை எனக்கூறும் மந்திரிகள் கூற்றுக்கு ரஷ்யநாட்டு சர்க்காரின் போக்கைச் சுட்டிக் காட்டி மிக விளக்கமாகப் பேசி விட்டு நம் தாய்மார்களும் நம் நாட்டு நிலைக்கேற்ப குழந்தைகள் பிறப்பதைக் குறைத்துக்கொள்ள முயலவேண்டும் எனவும் குறிப்பிட்டார்கள்.

20-1-50 வெள்ளிக்கிழமை

தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் தோழர் **அன்பு கணபதி** அவர்கள் பேசுகையில் பழந்தமிழ்க்காப்பியங்களில் உள்ள விழா பலவற்றை எடுத்துக்காட்டி, இனிவரும் பொங்கலாவது மகிழ்ச்சிப் பொங்கலாக இருக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார். பின்னர் **தோழர். கோவிந்தன்** பேசுகையில், இன்றைய அரசியலாரின் ஆணவபோக்கைக் கண்டித்து விட்டு, மத்திய ஆட்சியின் ஊழல்மலிந்த போக்கை விளக்கினார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னையைப் பார்க்கிறார்கள். அந்த ஒன்றே வெவ்வேறு உருவில் காட்சியளிப்பதைக் காண்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும் அர்த்தமற்ற பேச்சு போராக மாற்றுகிறது. இதனை மாற்றி அமைக்க, 'ஆரிய சீல'த்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப் பட்டுள்ள காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கலைத்தாக வேண்டும் முதல்முதலாக. 'ஆரிய சீல'த்தையும் 'பாரததேவி' விருப்பம் போல், "இதனால் மக்கள் சுகமடைவார்களா? இது 'தேசீய', பொருளாதார சுபிட்சத்திற்கு ஏற்றதா?" என்பதைத் தான் நாம் முதலில் கவனிக்க வேண்டும் மேற்கண்ட கேள்விகளுக்கு 'அல்ல' என்ற விடை கிடைக்குமாயின், சீர்திருத்தம் எப்படிப் பட்ட புரட்சிகரமாக இருப்பினும் அதைத் தைரியமாகச் செய்து முடிக்கத்தான் வேண்டும்."

ஆதரிக்க வேண்டுமாம் "இவர்களை!"

"இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களையே மக்கள் வாங்கவேண்டும். இவை அன்னிய சாமான்களை விட கொஞ்சம் அதிக விலையில் இருந்தாலும், இந்திய சாமான்களையே மக்கள் விரும்பி வாங்கவேண்டும். இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குத்தான், இந்தச் சாமான்களுக்கு அதிக விலை கொடுக்கவேண்டி வரும். கடைசியாக இதனால் மக்களுக்கு நன்மையே ஏற்படும். எனவே, அன்னிய சாமான்களை வாங்குவதில்லை என்று மக்கள் சபதம் செய்துகொள்ளவேண்டும்."

—சர்தார் பட்டேல்

* * * * *

ஜாவா சர்க்கரை

படேவியா (ஜாவா)வில் சர்க்கரை விலை விசை ரூ	0	1	10

* * * * *

சென்னையில் ஜாவா சர்க்கரை விலை (செலவு உள்பட) ரூ	0	3	0
இந்திய சர்க்கார் அதன் மீது விதிக்கும் வரி ரூ	0	6	0
வணிகர்கட்குரிய லாபம் ரூ	0	1	0
எனவே விற்கக் கூடிய விலை.	0	10	0

சர்க்கரை—அங்கும் இங்கும்

அமெரிக்காவில் ஒரு மணு	ரூ	11	0	0
ஸ்டெர்லிங் வட்டாரத்தில் ,,	ரூ	16	0	0
இந்தியாவில் (சர்க்கார் விலை)	ரூ	33	12	0
இந்தியாவில் சர்க்கார் விதித்துள்ள விலை விசை	ரூ	1	5	3
கள்ளமார்க்கெட்டில் விசை	ரூ	3 முதல் 5 வரை		

* * * * *

இந்திய முதலாளித்துவத்தின் மூன்றேடும் பிள்ளையான முதியவர் சர்தார் வல்லபாய்பட்டேல், நாட்டுமக்களை வேண்டிக் கொள்கிறார், இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள் என்று. மற்ற நாட்டுச் சாமான்களைவிட, இந்தியாவில் தயாரிக்கப்படும் சாமான்கள், விலையில் கூடுதலாக இருந்தால் கூட, அதனைப் பெரிதாகக் கொள்ளாமல், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களையே வாங்கி உபயோகியுங்கள் என்று நாட்டு மக்கள் அனைவரையும் தக்ளிதாங்கிகள் என்று எண்ணிக் கொண்டு, சுதேசியம் படிக்கிறார், சர்தார்ஜி— 'ஏழை பங்காளர்'! இரண்டு மூன்று ஆண்டுகள் இந்தக் கஷ்டத்தைச் சமாளித்துக் கொண்டால், பின்னர் நிலைமை நேராகிவிடுமென்று ஆருடம் கூறுகிறார், துணை அமைச்சர் பெருமானார்! வறுமை நீங்குமா? வாட்டம் குறையுமா? ஏழை, ஏழடுக்கு மாளிகையில் உலாவுவானா? தொழிலாளியின் துயர் நீங்குமா? பாலும் தேனும் கலந்து பாயுமா, கனம் பட்டேல்ஜியின் கருத்துரையின்படி, மக்கள், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு நடந்து கொண்டால்? வினாக்கள் விவேகமானவைதான். கேட்க வேண்டியதும் முக்கியந்தான். கேட்ட இடமும் தகுதியானதுதான். ஆனால், பதில்தான் கிடைக்காது! பதில் கூறவா கனம் பட்டேல்ஜி பதவியில் இருக்கிறார்? இல்லையே! கட்டளை பிறப்பிக்க! சிந்தனையைச் சிதறடிக்க! சுதந்திரத்தைத் தொலைக்க! எழுச்சியை அடக்க! எதிர்கட்சியினரை ஒடுக்க! வளத்தைக் குறைக்க! வறுமையைப் பெருக்க! வாட்டத்தை விரிவாக்க! இவ்வளவும் முற்போக்கு சக்திகளுக்கு, கனம் பட்டேல்ஜி தர வைத்துக் கொண்டிருக்கும், உலகில் வேறு எவராலும் கொடுக்க முடியாததும், கிடைத்தற்கரிதானதுமான நற்பரிசுகளாகும்!

ஆனால், பணம் படைத்தவர்களுக்கோ, ஆலை அரசுகளுக்கோ, செல்வச் சீமான்களுக்கோ, முன்னாள் முடிதாங்கிகளுக்கோ, கனம் பட்டேல்ஜி வைத்திருப்பதோ, வெவ்வேறு. அவர்களுக்குக் கோடிக்கணக்கிலே செல்வம் குவிய வழிவகை செய்வார்—லட்சக் கணக்கிலே பணம் குவிய பதவிகளைத் தேடித்தருவார்— நீர்மேல் குமிழிபோல் நிலைத்துநிற்காத சிறியரே மதிக்கும் இச் செல்வத்தைத் திரட்டித் தருவார்— இவ்வளவும் செய்வார் அச் சீமான்களுககு. இம்மையில் செல்வப் பெருக்கால் அச்சீமான்கள் சீரழியவும் மறுமையில் ரவுரவாதி நரகத்தில் அவர்கள்கிடந்துழலட்டு மென்றும்! (அவர்கள் கருத்துப்படி!)

ஏழைக்கு ஏற்றம்தேடித்தந்தால், பாட்டாளிக்குப்புதிய நிலை பிறக்கப் பார்த்துக் கொண்டால், சாதாரண மக்கள் உலகமாயையிலே மோகம் கொண்டு, உழைப்பை மறந்து, ஊதாரித்தனமாக வாழ்ந்து வந்து, கடமையைத் துறந்து, தங்களையும் கெடுத்துக் கொண்டு, நாட்டையும் கொடுங்காடாக வல்லவோ

மாற்றி விடுவார்கள்!! எனவே தான், பட்டேல்ஜி, உலகமாயையில் பொது மக்கள் மயங்கி விடாமல் இருக்க, உயிருக்குப்போராடிக் கொண்டு இருக்கும் நிலையிலேயே உழைப்பாளிகளை வைத்திருக்க, உபதேசம் புரிகிறார் மிக மிக உருக்கமாக! இந்த சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாமல், சிலர் அந்த மாபெரும் மனித உள்ளம் படைத்திருப்பவரை, நாத்தழும்பேற நிந்திக்கிறார்களே? ஏழைகள் சீர்கேடு அடையால் இருப்பதற்குத்தான்— இறந்த பின்னர் இடையறாத பேரின்பத்தில் அமிழ்ந்து இருக்கட்டும் என்ற முன் யோசனையோடு தான்— அந்த உருக்கிருப்பு மனிதர், தர்மம் கெட்டு அதர்மம் தலையெடுக்கிற போதெல்லாம், அரிய மொழிகளை, ஜீவான்மாக்கள் உய்ய, திருவாய் மலர்ந்தருள்கிறார்! இந்த ரகத்தைச் சேர்ந்தது தான், சுதேசிபத்தை ஆதரியுங்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு—அதிகவிலை என்று அஞ்சாதீர்கள்—என்பதும்!

கனம் பட்டேல்ஜி கொண்டுள்ள கோட்பாட்டிற்கேற்ப, காப்பாற்ற விரும்பும் சமுதாய அமைப்புக்கேற்ப, கனம் படேல்ஜி கூறுவது சரியானதுதான். ஆனால், அவர் நோக்கத்தின்படி பார்த்தால், அவருடைய உபதேசத்தில், தர்மம், இரண்டறக் கலந்திருப்பதாகத் தோன்றலாமேயன்றி, பொது மக்கள் கோரும் நல்வாழ்வின் தர்மப்படி பார்த்தால், அவருடைய வார்த்தைகளில், தர்மம், எள்ளுமூக்கத்தனையும் இல்லை என்பது விளக்கமாகும். புள்ளி விவரமாகக் கூற வேண்டுமானால், நமது நாட்டில் உள்ள சர்க்கரைத் தொழிலை எடுத்துக்காட்டிற்காக நோக்கலாம்.

* * *

இத் துணைக் கண்டத்தில் உள்ள மொத்த சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 134. அதில் போட்டுள்ள மூலதனம் ரூ. 35 கோடி. கடந்த பதினாறு ஆண்டுகளாக சர்க்கரை ஆலையினால் கிடைத்த இலாபம் ரூ. 255 கோடி. போட்ட முதலுக்கு ஏழுபங்கு இலாபம்.

இந்தக் கூடுதலான லாபமும், சர்க்கரை ஆலை அரசுகளாக முன் வந்து வெளிப்படையாக ஒப்புக் கொண்டதாகும். கணக்கில் எழுதாமல் சேர்த்துக்கொண்ட இலாபம் எவ்வளவு இருக்குமோ!

* * *

மொத்த சர்க்கரை ஆலைகளிலும் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் தொகை 1,33,000. கரும்பு சாகுபடி செய்யும் உழவர்கள் தொகை 2 கோடி.

பதினாறு ஆண்டுகளில் போட்ட முதலுக்கு ஏழுபங்கு அதிகமாக இலாபம் பெற்றிருக்கிறார்களே முதலாளிகள், அதுபோல், இந்தத் தொழிலாளர்கள் ஏதாவது வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்களா என்றால், அதுதான் கிடையாது. என்றும் அவர்கள் வாழ்க்கைத் தரம் மட்டமானதுதான். ஏதாவது சொத்து சேர்த்திருக்கிறார்களா என்றால், சேர்த்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு தொழிலாளியும் தனது குடும்பத்தைப் பெரிதாக்கி இருக்கிறான்; உழவர்கள் நிலையும் அதுவேதான்; மாற்றுத் துணிக்கும் மார்க்கமில்லாத அவல வாழ்வு! ஆனால் ரூ. 255 கோடி பெற்றிருக்கிறார்கள் பண அரசுகள்!

* * *

சர்க்கரையின் விலை ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வந்திருக்கிறது.

			மில் விலை		
1939-ல்	ஒரு மணு	ரூ.	7	0	0
1942-ல்	,,	,,	12	4	0
1943-ல்	,,	,,	14	9	0
1944-ல்	,,	,,	15	6	0
1945-ல்	,,	,,	16	12	0
1946-47-ல்	,,	,,	20	14	0
1949-ல்	,,	,,	29	5	0

இன்றுள்ள விலை, போருக்கு முன்பிருந்த விலையைக் காட்டிலும் நான்கு பங்கிற்கு அதிகமாகப்போய் விட்டிருக்கிறது. இதற்கு முதலாளிகள் சொல்லும் காரணம் எல்லாம் வழக்கமானதுதான். அதாவது, மூலப்பொருள்—கரும்பு அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது-தொழிலாளர்களுக்கும் கூலி கூடுதலாகத் தரவேண்டி இருக்கிறது என்பதாகும். ஒருமணங்கு சர்க்கரையின் உற்பத்திச் செலவை கவனிப்போம்.

ஒரு மணங்கு சர்க்கரைக்கு வேண்டிய கரும்பு விலை	ரூ.	13	0	0
உற்பத்திச் செலவு	,,	4	0	0
எக்சைஸ் வரி	,,	2	4	0
வேறு செலவு	,,	1	0	0
இலாபம் (5 சதவிகிதம்)		1	0	0
ஒரு மணங்கு சர்க்கரை		21	4	0

இலாபம் உள்பட, அடக்க விலை ரூ. 21-4-0 இருந்தாலும், இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள ரூ. 29-5-0-க்கும் விற்க நமது முதலாளிகள் தயாராக இல்லை. இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள விலையே கள்ளச் சந்தை விலையை ஒத்திருப்பதாக இருந்தாலும், இந்த விலையால் 50 சதவிகித இலாபம் கிடைப்பதாக இருந்தாலும், முதலாளிகள் இந்த இலாபமும் போதாதென்று முணுமுணுக்கிறார்கள். கள்ளச் சந்தையில் விற்றுப்பணம் திரட்டுவதற்காக, கைவிருப்பாக இருக்கிறது என்று தாங்களே குறிப்பிடும் சர்க்கரை மூட்டைகளையும், மறைத்து, முடக்கி, சர்க்கரைத்தட்டை உண்டாக்குகிறார்கள்.

* * *

இந்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையே, முதலாளிகளுக்கு அதிக இலாபம் தருவதாக இருக்க, இந்திய சர்க்காரின் நிர்ணய விலையும் நகரத்திற்கு நகரம் மாறுபட்டு இருப்பது வேதனை தரும் விசித்திரமாகும். அதாவது:—

கான்பூர்	ரூ.	33	2	0
மீரத்	ரூ.	32	8	0
பாட்னு	ரூ.	32	3	9
பம்பாய்	ரூ.	33	6	2
நியூடெல்லி	ரூ.	33	12	0

கான்பூர் சர்க்கரை ஆலைகளிலேயே உற்பத்தியாகும் சர்க்கரை, மில் விலையான ரூ. 29-5-0 க்குக் கூடுதலாக கான்பூர் கடைத்தெரு விலேயே விற்கக் காரணமென்ன? இந்தக் கொள்ளை இலாபம் யாருக்குப்போய் சேருகிறது? யாருக்குச் சேருவதாக இருந்தாலும், சர்க்கரையை உபயோகிக்கும் பொது மக்களுக்கு இத்தண்டனையைத் தருவது நியாயமானதுதானா?

* * *

இந்தக் கொள்ளையில் மற்றொரு ரகமான கொள்ளையும் டெல்லியில் நடந்துகொண்டு இருக்கிறது. சர்க்கரை மில்லைகள் தயாரிக்கிறவர்கள், மில்லைகளாக தயாரித்து, மணங்கு ஒன்றுக்கு ரூ. 57-8-0 விதம் விற்று 175 சதவிகிதம் இலாபம் சம்பாதிக்கிறார்கள். கனம் பட்டேல்ஜி ஆட்சி புரிகிறாரே, வெகு கம்பீரமாக, அதே நியூ டெல்லி நகரில்தான், இத்தவிதமான பகற் கொள்ளை நடைபெறுகிறது!

* * *

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்!

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 29
11—2—50 சனிக்கிழமை

'ஆரிய சீலம்'

தலைப்பை நாம் கொடுத்துக் கொண்டதல்ல—அந்தச் சீலத்திலே மனு மாந்தாத காலமுதல் ஊறிவந்து—காலத்துக் கேற்ற தோற்ற மெனப் புதுக்கோலம் கொண்டுள்ள—' பாரததேவி நான்கு நாளைக்கு முன்பு, இந்தத் தலைப்பின் கீழ் எழுதுகிறது, இந்தியப் பாராளு மன்றத்தில், குடியரசுத் தலைவர் புரிந்த சொற்பொழிவின் மீது எழுந்த விவாதத்திற்கு, பிரதமமந்திரி பண்டித ஜவகர் பதில் கூறும் பொழுது நடைபெற்ற வாய்ச் சண்டையைக் குறித்து! குடியரசுத் தலைவர் சொற்பொழிவின் மீது, நடந்த விவாதங்களில் பெரும்பாலானவை, சர்வ சாதாரண சில்லரை விஷயங்களைப் பற்றினவாக இருந்திருக்கின்றன வேயன்றி, அடிப்படைக் கொள்கைகளைப் பற்றினவாக இருக்கவில்லை என்று பண்டிதர் சுட்டிக் காட்டி இருப்பது வரவேற்கத் தகுந்ததே யாகும்.

அதிகாரத்தில் இருக்கும் சர்க்கார் மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு கட்டும் பண்பு கொண்டதாக விவாதம் அமைந்திருக்க வேண்டியது தான் முறையாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். அதற்கான இன்றியமையாத் தேவையையும் எடுத்துக் காட்டியுள்ளார். பாராளு மன்றத்தில் ஆள வந்தார்களுக்கு எதிராகப்பலம்பொருந்தியதோர் எதிர்க்கட்சி இருந்தால் தான், அது நடைமுறையில் சாத்தியமானதாக இருக்க முடியும் என்றும் விளக்க முரைத்தார் முதல் மந்திரியார்.

ஒழுங்கான - வலிமைமிக்க—நல்லதோர் எதிர்க்கட்சி, இத்துணைக் கண்டத்தில் அமைவது இலகுவில் முடியக்கூடிய காரியமா என்பதை, நேர் மதியாளர்கள்— மக்களாட்சி முறையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள், ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய அரும்பெரும் விஷயமாகும். இத்துணைக் கண்டத்தின் முன்னாள் வரலாற்றினை நன்கு கற்றறிந்து, அதன் சாரத்தைத் தெரிந்து தெளிவு பெற்றிருக்கிறவர்கள், பண்டிதர் விரும்பும் மக்கள் ஆட்சியின் முக்கிய கோட்பாட்டிற்கும், இந்த நாட்டு மக்களுக்கும் இது வரை ஒருவர் வரையிலாவது நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறதா, அந்த மனவளத்தைக் கொடுக்கும் பண்பாவது 'ஆரிய சீல'த்துக்கு இருந்திருக்கிறதா என்பதை நன்கு அறிந்தே இருக்க வேண்டும். 'ஆரியசீல'த்தின் முதுகெலும்பு முறிக்கப் பட்டாலன்றி, ஒவ்வொரு தனிமனிதனையும்மதித்து நடக்க வேண்டும் என்ற மக்களாட்சியின் மூலமான கோட்பாட்டினை, இந்த நாட்டில் கட்டிக் காக்க முடியாது. ஆண்டவன்—அடிமை என்பதுதான் 'ஆரிய சீல'த்தின் அஸ்திவாரம். பண்டிதர் எடுத்துக் காட்டி இருப்பது போல், இந்த 'ஆரியசீலத்'தால் இத்துணைக் கண்டம், படையெடுத்து வந்தவர் அனைவரின் தாள்களைப் பற்றவும், காலத்தோடு கருத்து மாற்றம் பெறாமல் கதி கலங்கி நிற்கவுமான கேவல நிலைமை பெற்று வந்து இருக்கிறது. மேலும் அந்த நிலையே நீடித்து இருக்கவிடுவது, நேர்மையும் ஆகாது, அதற்குத் தேவையும் கிடையாது

இன்று, பாராளுமன்றத்தில் நின்று, 'ஆரியசீலம்'தன் வஜ்ஜிராயுதத்தை, தமது சிரசுக்கு நேராக ஏவுவதைக் கண்டு கோபிக்கிறாரே பிரதமர். அவரும், இதுவரை இந்த 'ஆரிய சீலம்' ஆக்கம் பெறுவதற்கு ஏதாவது சொல்லாலும் செயலாலும் துணை செய்திருக்கிறாரா இல்லையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அது மட்டும் போதாது அவருடைய கட்சி இந்த ஆரிய சீலத்தை வளர்த்து வந்திருக்கிறதா இல்லையா என்றும் கருதிப பார்க்க வேண்டும். என்ன கூறுவார் பண்டிதர்? மறைந்த தூயவர் முதல், காங்கிரஸ் கைதூக்கிகள் வரை, சிலர் 'ஆரிய சீலம்' என்று வெளிப்படையாகக் கூறியும், வேறு பலர் 'தேசீயம்' என்று பெயர் கூறியும் 'ஆரிய சீலத்தை' வளர்த்து வந்திருக்கிறதை வெளியில் மறுத்து விடவாமுடியும்? காங்கிரஸ் மேடைகளிலே அரசியல் பேச்சா நிகழ்ந்து வந்திருக்கிறது? மற்றோர் பஜனைமடமாக வல்லவோ அரசியல் ஸ்தாபனம் என்று சொல்லிக் கொள்ளப் பட்ட காங்கிரஸ் நிறுவனம் வளர்ந்து வந்திருக்கிறது! மண்ணாங்கட்டியையும் மரத்தையும் வணங்கும் மனவளத்தைக் கொண்டுதானே காங்கிரஸ் கோட்டை உருவாக்கப் பட்டது! காடும் காணும் கனத்ததோர் மலையையும் கொண்ட இத்துணைக் கண்டத்தை, பற்றுதல் கொள்ளக் கூடியதாக மட்டும் கொள்ளாமல், பயந்தோடும் பக்திக்குரிய 'பாரத மாதா'வாக மாற்றிவிட்ட பெருமை, பண்டித ஜவகருக்கும் உண்டே! எந்தக் காலத்து மனவளம் இது? கல்

லையும்செம்பையும் கடவுளாக்கி, கோடிக்கணக்கிலே இன்றும் பணத்தைப் பாழ்பண்ணுவது 'ஆரிய சீல' ஆபாச சிகரம் என்பதை எவரால் மறந்துவிட முடியும்? இதுவரை, என்றாவது இதுபற்றி காங்கிரஸ் தலைவர்கள் கண்டித்திருக்கிறார்களா, இந்தக் காட்டுமிராண்டி மனவளத்தை? மூக்கிற்கு முன்னால் கடவுளைக் காண, கல்லைக் கடவுளாக பாவித்து, மனத்தை ஒருநிலைபடுத்திப் பழகவேண்டியது இன்றியமையாததாகிறது என்று, அமெரிக்கா போய்வந்த பின்னரும் 'ஆரிய சீலம்' பற்றி 'அறிவுரை' அளிக்கிறார்களே, அவர்களின் அந்தரங்கத்தை, காங்கிரஸ் என்றாவது பொதுமக்களிடம் காட்டிக் கொடுத்ததுண்டா? அதற்கு பதிலாக, 'ஆரிய சீலத்தைக் கண்டித்து வந்தவர்களை நிந்திக்காமலாவது, காங்கிரஸ் இருந்ததுண்டா? பிறர் 'திலக'மிட மகிழ்ந்தும், 'ஆர்த்தி' எடுக்க அகமும் முகமும் மலர்ந்தும், வந்திருக்கின்ற தலைவர்களின் பட்டியலில் பண்டிதரின் பெயருந்தான் இருக்கிறது —பாராளுமன்றத்தில் 'ஆரிய சீலம்' பேசிய பண்டிட் பாலகிருஷ்ண சர்மாவின் பெயருந்தான் இருக்கிறது! நாடாளும் பிரதமர் நவீனம் பேச, காங்கிரஸ் கட்சியின் தலைவர் பட்டாபியார் மனுகாலத்தின் மாண்புக்கு மகளிரையும்— மக்களையும் திரும்பிச் செல்ல அழைக்கிறார்.

'ஆரிய சீலம்' விஞ்ஞான சாதனங்களை —கண்டுபிடிப்புகளை — வெறுத்துவிடாது; விஞ்ஞானிகளைக் காட்டிலும், அந்த ஏற்பாடுகளை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளும். கப்பலேறுவதற்கும், புகை வண்டியில் ஸ்தலயாத்திரை செல்வதற்கும், மோட்டாரில் ஏறி கடற்காற்று பெற கடற்கரை செல்வதற்கும், எந்த ஆரிய சீலமும் குறுக்கிடுவதில்லை! ஆனால், மனிதனை மனிதனாகப் பாவிப்பதற்கும், கல்லைக் கடவுளாகப் பாவித்துத் தொழுது நிற்பதை நிறுத்தி விடுவதற்குந்தான், 'ஆரிய சீலம்' இமயம் என இருதயத்தை மாற்றிவிடும்!

காங்கிரஸ் கேட்ட சுயராஜ்யம், இந்த மண்ணில் வாழ விருப்பம் கொண்ட மக்களுக்காகவே யல்லாமல், வைகுந்தம் செல்வதாகச் சொல்லிக்கொள்ளும் வக்கிரங்களின் போலி தத்துவத்திற்குப் புதுநிலை தேட அல்ல. மக்களின் மதபக்தியை பயன்படுத்திக் கொள்வதை விட்டு, மண்ணுலக வாழ்வை பொன்னுலகமாக மாற்றும் சீரிய அறிவியல் பாதையில், தனது விடுதலைத் தேரை, காங்கிரஸ் செலுத்தி வந்திருந்தால், பாலகிருஷ்ண சர்மாக்களும் ஹனுமந்தையாக்களும், வெளிப்படையாக, பாராளும் மன்றமேறி 'ஆரிய சீலம்' பற்றி அலறிப் புடைத்திருக்கும் நிலை நாட்டில் இருந்திருக்காது. அந்த மன்றத்திலே வேறு சிலர் இருந்திருப்பர்; பண்டிதர் விரும்பும் நிலையில் பேச்சின் தரமும் திறமும் இருந்திருக்கும்.

குடியரசுத் தலைவரின் முன்னும் பின்னும் இராணுவம் பவனி வந்ததை, அந்த 'ஆரிய சீலர்'கள் ஆட்சேபித்து இருக்கிறார்கள். காங்கிரசின், இந்தப் போக்கினை அவர்கள் மட்டுமல்ல, காங்கிரசின் முன்னாள் கோட்பாடே கூட, அதற்கு நம்மைப்போல் பேசும் ஆற்றல் இருந்தால், கண்ணீர் பெருக்கி இருக்கும்—கதறி புலம்பி இருக்கும்—'ஏற்றுமா நமக்கு இந்தச் செயல்?' என்று கேட்டு இருக்கும். முன்னாள் பேசிவந்த காங்கிரசின் 'அகிம்சா' கோட்பாட்டிற்கு, இந்த இராணுவ பவனி முரண்பாடுடைய தாயிற்றேஎன்பதை நினைத்துப்பார்க்காத காங்கிரஸ் தலைவர்களோ, தொண்டர்களோ இருக்கமுடியாது. பிறரிடம் வேண்டுமானால், தங்கள் மனத்தில் எழுவதைச் சொல்லாமல இருக்கலாம். ஆனால், ஒரு காங்கிரஸ்காரர் உள்ளமாவது, இந்த மனப்புயலை அனுபவித்திராமல் இருக்கமுடியாது.

ஒரு அரசுக்கு இராணுவம் கூடாது என்பதல்ல நமது கோட்பாடு. எனவே, இராணுவ பவனிவருவதை குறைபாடு உடையது என்று நாம் கொள்ள மாட்டோம். காங்கிரஸ் கட்சியினரின் முன்னாள் சொல்லுக்கும், இந்நாள் போக்கிற்கும் முரண்பாடு இருக்கிறதே— இருக்கலாமா? ஏன் இந்தப் போக்கு? என்பது தான் நமது கேள்வி.

சில கோட்பாடுகளைக் கொண்டது காங்கிரஸ் ஸ்தாபனம் என்பது உண்மையானால், அங்கு பேசிய பிரதமர் பண்டிதரும், 'ஆரியசீல'த்தைப் பற்றிப் பேசிய பண்டிதரும், காங்கிரசின் வெவ்வேறு முரண்படும் கோட்பாடுகள் ஒவ்வொன்றின் துணைக் கொண்டும், ஒரேபிரச்

(3-ம் பக்கம் பார்க்க

பெரியார் ஈ. வே. கி

இத் திங்கள் 4-2-50 சனிக்கிழமை யன்று, நமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் ஈரோட்டில், தமது இல்லத்தில் இயற்கை எய்தி விட்டார் என்ற செய்தியை நமக்கு மிகவும் வேதனைத்தருவதாக இருக்கிறது அவருடைய இல்லக்கிழத்தியாருக்கும், அவருடைய நன்மக்களுக்கும், இது ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமே யாகும். நாம், நமது ஆழ்ந்த அனுதாபத்தை, நண்பர் ஈவெ. கி. சம்பத் அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அஸ்கா சர்க்கரைக்கு மட்டும் விலை நிர்ணயக் கட்டுப்பாடு செய்ததால், வெல்லத்தின் விலையும் பழுப்பு சர்க்கரையின் விலையும் ஒன்றுக்கு மூன்றாகக் கூடிவிட்டது. இதன் பலனாக, வெல்லம் தயாரிப்பவர்களும், பழுப்பு சர்க்கரை உற்பத்தியாளர்களும் கரும்புக்கு அதிகவிலை கொடுத்து வாங்க முன்வந்தனர். விலை கூடுதலாகக் கிடைத்ததால், கரும்பு சாகுபடி செய்கிறவர்களும், சர்க்கரை ஆலைகளுக்குக் குறைந்த விலைகளுக்குக் கொடுப்பதற்குப்பதில், வெல்லம் காய்ச்சுகிறவர்களுக்குக் கரும்பை விற்க முனைந்தனர். இதன் விளைவாக, கரும்பு கிடைப்பதில் தட்டு ஏற்படவே கான்பூரிலுள்ள சில சர்க்கரை ஆலைகள் முழு நேரமும் வேலைசெய்ய முடியவில்லை. இதனால், இந்த ஆண்டிலும், சர்க்கரை உற்பத்தி குறைந்துவிட்டது என்று, முதலாளிகள் சாக்குக்கூற ஒரு அரிய வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.

* * *

பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன்பு, இத் துணைக்கண்டத்தில் 11½ லட்சம் டன் சர்க்கரை செலவாகிவந்திருக்கிறது. 13 ஆண்டுகளாக சராசரி இதே தொகைதான். பாகிஸ்தான் பிரிந்த பிறகு, இந்தியாவிற்கு மட்டும் தேவைப்படும் சர்க்கரை 9½ லட்சம் டன்தான்.

* * *

1946-ம் வருஷத்தைப் போலவே, 1949-ம் ஆண்டிலும் உற்பத்தியாகும் சர்க்கரையின் மதிப்பு 10 லட்சம் டன் இருக்கலாம் என்று மதிப்பிட்டிருந்தார்கள். இதன்படி சுமார் 50,000 டன் சர்க்கரை அதிகப்படியாக மீதம் இருக்க வேண்டும். வடநாட்டு சர்க்கரை ஆலை முதலாளிகளின் ஸ்தாபனமான ஷுகர் ஸிண்டிகேட், 1948 டிசம்பர் மாதத்தில், காப்பு வரிக் குழுவினிடம், 2 லட்சம் டன் சர்க்கரை அதிகப்படியாகக் கையிருப்பில் இருக்கிறது என்று அறிவித்தது. இதில் சுமார் நாலில் ஒரு பங்கு வீதம் பாகிஸ்தானுக்குக் கள்ளத்தனமாகக் கடத்தப் பட்டு விட்டது. 1949 ஜூலை மாதத்திற்கும் ஆகஸ்ட்மாதத்திற்கும் இடையில் சில வாரங்களுக்கெல்லாம், 1949-ல் உற்பத்தி செய்யப் பட்ட மொத்த சர்க்கரையும், 1948 முடிவில் மீதமாக இருந்த 1¾ லட்சம் டன் சர்க்கரையும், கள்ளச் சந்தையில் குடியேறிவிட்டது. வெளிப்படையாகக் கடைகளில் சர்க்கரை விற்கப் படவில்லை. ஒரு சிட்டிகை சர்க்கரை கிடைப்பதும் குதிரைக் கொம்பாகிவிட்டது. சர்க்கரை கிடைக்காமல் மக்கள் திண்டாடினர். அக்டோபர் மாதத்தில் மக்களின் கிளர்ச்சி உச்ச நிலையை அடைந்து விட்டது பம்பாய்நகரில், பெண்களை நோக்கிப் போலீஸ் சுட வேண்டிய அளவிற்கு சர்க்கரை கலகம் உருவெடுத்து நின்றது. சர்க்கரை முட்டைக் குறித்து பிர்லாஜியின் பத்திரிக்கையான 'ஈஸ்ட்டர்ன் எகனமிஸ்ட்' சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தகுந்ததாகும்.

"ஜூலை மாத ஆரம்பத்திலிருந்து, கட்டுப்படுத்தப்பட்டுள்ள மில் விலைக்கு மேல் மூட்டை ஒன்றுக்கு 1 ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் கூடுதலாக, சர்க்கரை தொழிற்சாலைகள், சர்க்கரையை விலைகூறினதையும், விற்றதையும் மெய்ப்பிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. கூடுதலான விலையில் சர்க்கரையைக் கொள்முதல் செய்வதில் மொத்த வியாபாரிகள் சந்தோஷப்பட்டதையும், அதே நேரத்தில் அதிகமாகசர்க்கரைசெலவாகும் இடங்களிலுள்ள சில்லரை வியாபாரிகளை அச்சுறுத்தி, எதிர் பார்க்க முடியாத அளவிற்கு விலையைக் கூட்டுவதில் வெற்றி பெற்றதையும்ருசுப்பிப்பதற்கும் சாட்சியங்கள் உண்டு."

"கையிருப்பு சர்க்கரை முழுதும், கள்ளச் சந்தைக்கோ அல்லது கொள்ளை லாபக்காரரிடமோ பதுக்கல்காரர்களிடமோ சிக்கி விட்டது என்பதில் ஒரு துளியும் சந்தேகமில்லை. எனவே, புதிய உற்பத்தி கடைத்தெருக்களுக்கு வருகிறவரையில், இவர்கள் கொள்ளை விலையை பாதுகாத்து வருவது இவர்களுக்குச் சுலபமானதாகும்."

ஒரு பெரிய முதலாளியின் பத்திரிகையான ஈஸ்ட்டர்ன் எகனமிஸ்ட்' பத்திரிகையே, சர்க்கரை முட்டின் குட்டை அம்பலப்படுத்தி இருக்கிறது. கையிருப்பில் இருந்த சர்க்கரை மூட்டைகளை சர்க்கார் நிர்ணயித்த விலைக்குக் கூடுதலாக விற்று, ஆலை முதலாளிகள் கொள்ளையடித்தார்கள் என்றும், கையிருப்பில் இருந்த மூட்டைகளை எல்லாம் கள்ளச் சந்தையில் பதுக்கிவிட்டார்கள் முதலாளிகளும் மொத்தவியாபாரிகளும் என்றும், மேலும் புதிய சர்க்கரை உற்பத்தியாகி வெளியில் வருகிற வரையில் இவர்களுக்கு இலாப வேட்டைதான் என்றும், ஐயத்திற்கு இடமில்லாமல் வெளிப்படையாக எழுதி இருக்கிறது. சர்க்கரை தட்டுப்பாடு, தேவைக்குக் குறைவாக சர்க்கரை உற்பத்தியானதால் தான் ஏற்பட்டுவிட்டது என்றுசொல்வதற்கு இல்லை, இந்தச் சர்க்கரை திண்டாட்டத்தை, விலையைக் கூட்டிக் கொள்ளை இலாபம் அடிப்பதற்கென்றே, சர்க்கரை ஆலை முதலாளிகளும் மொத்த வியாபாரிகளும், கூட்டாகச் சேர்ந்து, பொதுமக்கள் மீது, வலுக்கட்டாயமாகப் புகுத்தி இருக்கிறார்கள் என்பது விளக்கமாகிறது.

இதனை அறியாதவர் போல், உணவு மந்திரி தௌலத்ராம், "சர்க்கரையின் விலை மலிவைக் கண்டு, இதுவரை வெல்லத்தை உபயோகித்தவர்களில் பெரும்பாலோர் சர்க்கரையை உபயோகிக்கத் துவங்கி விட்டார்கள். ஆதலால் தான் சர்க்கரை கிடைப்பது அரிதாகிவிட்டது" என்று சத்திய சோதனை செய்தார். கனம் பட்டேல்ஜியும் இதனையே வற்புறுத்திக் கூறினார்.

பொதுமக்களுக்குஒன்றும்வாழ்க்கைத்தரம் இன்று உயர்ந்துவிடவில்லை. அவர்களுடைய சராசரி வருமானமும் கூடிவிடவில்லை. எனவே, வாங்கும் சக்தியும் அவர்களுக்கு அதிகமாகி இருக்க நியாயமில்லை. 1942-ம் வருஷத்தில் இருந்ததைக் காட்டிலும் 1949-ம் வருஷத்தில், 139 சதவிகிதம சர்க்கரை விலையில் கூடிவிட்டு இருக்கும் போது, 1942-ல் உபயோகித்ததைக் காட்டிலும் 1949-ல் கூடுதலான விலையில், அதிகமான மக்கள், அதிகமாக சர்க்கரை உபயோகிக்கிறார்கள் என்று பேசுவது, பெரும் வியப்பாகும்!

இப்படிப் பொது மக்களைச் சுரண்டி, பொருள் தட்டுப்பாட்டை நிர்ப்பந்தமாகப் புகுத்தி, கோடிக் கணக்கில் பணந்திரட்டுவதின் முழுப்பொறுப்பும், முதலாளிகளையும் மொத்த வியாபாரிகளையும் மட்டுமே சார்ந்தது என்று சொல்லி விடமுடியாது. மறைமுகமாகவோ

வெளிப்படையாகவோ இந்திய சர்க்காரும், இந்தப் பொதுஜன விரோதிகளுக்கு ஆதரவு அளித்து வந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக 1947ம் ஆண்டு டிசம்பரில் சர்க்கரை கட்டுப்பாட்டை இந்திய சர்க்கார் நீக்கிற்று. மணங்கு ஒன்றுக்கு ரூ 20-14-0 ஆக விற்றிருந்த சர்க்கரை, கட்டுப்பாட்டை நீக்கின உடனே ரூ 35-7-0 ஆக விலை உயர்த்தப்பட்டு விட்டது. கட்டுப்பாடு இருந்த நேரத்திலேயே, கள்ள மார்க்கட்டில் இலாப வேட்டை புரிந்தவர்களுக்கு, இந்திய சர்க்கார் இரக்கம் காட்டிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது, கையிருப்பு சர்க்கரையை முன் விலையைக் காட்டிலும் ரூ 15 கூடுதலாக விற்று, கோடிக்கணக்கில் பணம் திரட்ட ஏற்பாடு செய்து கொடுத்ததாக முடிந்தது.

இந்த விரும்பத்தகாத நிலையைக் கண்டதும், இந்திய சர்க்கார் மறுபடியும் விலையை ரூ 29-5-0 என்று நிர்ணயித்தது. ஆனால் இந்த விலைக்கு, வெளியில் சர்க்கரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

சில மாதங்களுக்கு முன்பு, கையிருப்பில் தேவைக்கு அதிகமாக 3 லட்சம் டன் சர்க்கரை இருப்பதாகவும், இதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றும்; சர்க்கரை ஆலை முதலாளிகள், இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறினர். அவ்வளவுதான் தாமதம் இந்திய சர்க்காரும் ஆலை அரசுகளுக்குக் கருணை காட்ட ஆரம்பித்தது. மற்றநாட்டு சர்க்கரையின் விலை, நமது நாட்டு சர்க்கரையைக் காட்டிலும் விலை குறைவாக இருக்கும் பொழுது, வெளிநாட்டுக்காரர்கள் நமது சர்க்கரையைத் தேடமாட்டார்கள். மற்ற நாட்டு சர்க்கரையின் விலைக்கு ஈடாக நமது நாட்டு சர்க்கரையின் விலையையும் குறைத்தால்தான், மற்ற நாடுகளுக்கு நமது சர்க்கரையை ஏற்றுமதி செய்யமுடியும். குறைவான விலையில் மற்ற வெளிநாடுகளுக்கு நமது சர்க்கரையை ஏற்றுமதி செய்வதால் துண்டுவிழும் நஷ்டத்தை ஈடு செய்வதற்கென்று, மணங்கு ஒன்றுக்கு நான்கணா விதம் ஏற்றுமதி வரி விதித்துக் கொள்ள, ஆலை அரசுகளுக்கு, இந்திய சர்க்கார் அதிகாரம் கொடுத்தது. இந்த நாட்டில் சர்க்கரை உபயோகிக்கிற பொது மக்கள், இந்த வகையில் ரூ 75 லட்சத்தை, இந்தப் பணமூட்டைகளுக்குக் கொட்டியழுதார்கள். கொடுப்பதையும் கொடுத்துக் குஷ்டரோகி காலில் விழுவது என்பார்களே, அது இதற்குத்தான் பொருத்தமாக இருக்கிறது.

அதிகப்படியாகக்கையிருப்பில் 3 லட்சம் டன் சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது—அது உள்நாட்டில் விற்பனையாகவில்லை — வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தாக வேண்டும். அதனால் நஷ்டம் ஏற்பட இடமிருக்கிறது—அப்படித் துண்டு விழும் தொகையை உள்நாட்டில் தான் வசூலித்து ஆகவேண்டும்—என்று சர்க்கரை ஆலை முதலாளிகள் கூற, ஏற்றுமதி வரியாக மணங்கு ஒன்றுக்கு 4 அணா வரி போட்டு உள்நாட்டில் வசூலித்துக் கொள்ளுங்கள்—என்று இந்திய சர்க்கார் ஆணை இட, இதோ ரூ 75 லட்சம் நாங்கள் தருகிறோம்—சர்க்கரையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து விட்டு எங்களை சர்க்கரை இல்லாமல் திண்டாட விடுங்கள்—கள்ளமார்க்கட்டில் அதிக விலைக்குவிற்று எங்களைச்சுரண்டிக் கொடுங்கள்—என்று பொதுமக்கள் காசுகொடுத்து 'சூன்யம்' வைத்துக் கொண்டார்கள். விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்கள் வேதனையை!

சமீபகாலத்தில்ஏற்பட்டசர்க்கரை நெருக்கடியின்போது, இந்திய சர்க்கார் கைகட்டிக் கொண்டு நெருக்கடியைக்கவனித்துக்கொண்டுஇருந்தது. சர்க்கரை இருப்பில் 90 சதவிகிதம் கள்ளமார்கெட்டுக்குப் போய் விட்டபிறகு, இந்தியசர்க்கார் வெகு தீவிரமாக இயங்க ஆரம்பித்து, ஆலை முதலாளிகளிடம் இருந்த கையிருப்பு சர்க்கரையை முடக்கிற்று. கிடைத்த பலன் பூஜ்யம்!

இந்திய சட்ட சபையில் இரைச்சல் பலமாயிற்று. ஆலை முதலாளிகளைச்சாடினர் சிலர். அந்தமுதலாளிகளின் சங்கடமான ஷுகர் சிண்டிகேட்டைக் கோபித்துக் கொண்டனர் சிலர். மொத்த வியாபாரிகளைப் பழித்தனர் சிலர். இந்திய சர்க்காரை சந்தி சிரிக்க வைத்தனர் சிலர்.

"ஆலைகளும், ஷுகர் சிண்டிகேட்டும், பொதுமக்களை சுமார் இருபது கோடி ரூபாயுக்குக் கொள்ளையடித்திருக்கின்றன' என்றார் புரொபசர் ஷிபன்லால் சேக்சானா.

"முதல்முதலாக, சர்க்கார் நடைபெறுவதை சாத்தியமற்றதாக்க நினைக்கிறார்கள், இந்த முதலாளிகள். இரண்டாவதாக, சர்க்கார் நிர்வாகமோ திறமையானதாகவும் இல்லை புத்திசாலித்தனமானதாகவும் இல்லை. இந்த சர்க்காராவது திறமையாக ஆளவேண்டும் அல்லது மற்றவர்கள் ஆளவாவது இடத்தைக் காலிசெய்ய வேண்டும். திறமையாக நிர்வாகம் செய் அல்லது வெளியேறு!" என்று ஆச்சாரியா கிருப்ளானி கர்ஜனை செய்தார்.

"அவசியமிருந்தாலும் இல்லாமற் போனாலும், கள்ளச் சந்தைக்காரர்களைக் கூப்பிட்டு ஆலோசனை செய்வதை இந்தசர்க்கார் கைவிட்டு விடுமா?" என்று தோழர் ராமநாத கோயங்கா கோபப்பட்டார்.

ஆனால், இவ்வளவு பிளிறலும், கர்ஜனையும், கத்தலும் எதற்கு என்று எண்ணுகிறீர்கள்? சர்க்கரை ஆலை பணவிழுங்கிகளை, நீதிமன்றத்துக்கு இழுத்து, தக்கபடி தண்டிக்கவா? சமுதாய விரோதிகளான கள்ளமார்க்கெட்காரர்களைக் கண்டுபிடித்துத் தூக்கில் தொங்கவிடவா? அல்லது எல்லாம் தொலைந்தது தொலையட்டுமென்று விட்டுவிட்டு, சர்க்கரை ஆலைகள் அனைத்தையும் நாட்டின் பொதுச் சொத்தாக்கி, பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, சர்க்கரை விலையையும் குறைத்து, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, உழவர்களின் குறைபாடுகளைக் களைந்து, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற உயர்ந்த நிலைக்கு இந்நாட்டு மக்களைக் கொண்டுவரவா — இந்தச் சாதாரண அல்ப காரியங்களையா, இவ்வளவு பெரிய தியாகிகள் செய்வர்!

எப்படி இந்த சர்க்கரை நெருக்கடி ஏற்பட்டது—எவர் இதற்குப் பொறுப்பானவர்கள்—என்பதைக் கண்டுபிடிக்கத்தான், இவ்வளவு ருத்திர நாடகமும் டெல்லி சட்ட சபையில் நடித்துக் காட்டப்பட்டது.

இவ்வளவு கூச்சலுக்கும், உணவு மந்திரியான ஜெயராம் தாஸ் தௌலத்ராம், பொது மக்களால்தான் பிளாக் மார்க்கெட் நடைபெறுகிறது, பொது மக்கள் கள்ளச் சந்தையை ஆதரிப்பதைக்

கைவிடவேண்டும், சர்க்கரை உபயோகிப்பதை நிறுத்திக்கொண்டு வெல்லத்தையும் பழுப்பு சர்க்கரையையும் அதிகமாக உபயோகிக்க வேண்டும், என்று அரிய யோசனையைக் கூறுவதின் மூலம், தனது பேச்சுப் பங்கை நிறைவேற்றிவிட்டார்.

கடந்த பதினேழு வருஷங்களாக, இந்தச் சர்க்கரை தொழில் இந்திய சர்க்காரின் பாதுகாப்பைப் பெற்றுவந்திருக்கிறது. அதாவது, ஒவ்வொரு சர்க்கரை சாப்பிடுகிறவர்களும், இந்தத் தொழிலை வளர்க்க—இதன் முதலாளிகளின் தொந்தியைப் பெருக்க மறைமுகமாகக் கப்பம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். குறைவான முதல் போட்டு, சாதாரணமான செலவு செய்து, உலகில் வேறு எங்கும் இல்லாத அதிக விலைக்கு சர்க்கரையை விற்று, பொது மக்கள் அனைவரையும் சுரண்டி, 1,33,000 தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சி, 2 கோடி உழவர்களின் உதிரத்தைக் குடித்து, கள்ள மார்க்கெட் பேரம் வேறு செய்து, போட்ட முதல் 35 கோடி ரூபாயாக இருக்க வெளிப்படையாக கணக்கிடப்பட்டுள்ள முறையில் 255 கோடி ரூபாய் இலாபம் பெறும் அளவிற்கு, இந்த நாட்டு மக்களைக் கசக்கிச் சாறு பிழிந்து, இச்சர்க்கரை தொழில் ஓங்கி வளர்ந்து வந்திருக்கிறது: இதற்கான புள்ளி விவரம் விளக்கமாக இருக்கிறது.

கண்ணுக்குத் தெரிந்தாற் போல் கணக்கு இருக்கிறது. களவாணிகள் யார் யார் என்பதை, அந்தக் கணக்கு சுட்டிக் காட்டுகிறது. கடவடிக்கை எடுத்துக் கொள்வதில்—கொள்ளைக்காரர்களைத் தண்டிப்பதில் — கேடுகளைக் களைவதில் — உண்மையிலேயே இந்திய சர்க்காருக்கு நல்லெண்ணமும், விருப்பமும் இருக்குமானால், இது விஷயத்தில், இதுவரை கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டே, நீதியை நிலைநாட்ட முனையலாம். மாசு துடைக்கத் தயங்குவதிலிருந்தே, இந்திய சர்க்காரின் நல்லெண்ணத்தை, நாம் மட்டும் என்ன—நல்லறிவாளர்கள் அனைவருந்தான் சந்தேகிப்பார்கள். இதில் என்ன ஆச்சரியமிருக்கிறது-என்னதான் தவறு இருக்கிறது?

இந்தச் சர்க்கரை ஆலைக் கழுகுகள் போன்ற கண்ணியவான்களைத்தான், அதிக விலை கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்று கனம் பட்டேல்ஜி கதறுகிறார்! எவ்வளவு அவசியமான காரியம்! இந்த மகானுபாவருக்குத் தான் என்ன கருணை! கனம் பட்டேல்ஜி, வாழிய நீவிர், நீடூழி!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்தி அழகுபார்க்கும் மக்களுக்கு, பிரதிபலனாக, இவர் தரும் அத்தாட்சி இதுதான்! காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சளாக இருக்குமாம். அதுபோலவே கனம் கோபாலர் காண்கிறார் மக்கள் குலமே ஒழுங்கீனமானதாக இருப்பதாக!

வேறு நாட்டில்—மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்கும் நாட்டில்—மக்களைப் பழித்துப் பேசும் மனவளம் கொண்டவர்களை, ஆட்சி மன்றத்தை விட்டு அகற்றி, அந்த இடத்தைப் பரிசுத்தப் படுத்தி இருப்பர் மக்கள் இதற்குள். ஆனால், இங்கு? மக்களை ஏசுபவர்—தூற்றுபவர்—தரணியாளும் தகுதி பெற்றிருக்கும் நிலை இங்கு இருக்கிறது! இந்தக் கேவல நிலையிலும், நாம் பேசிக்கொள்ளுகிறோம், நம்மையே நாம் பாராட்டிக் கொள்ளுகிறோம், மக்களாட்சி முறைதான் நடைமுறையில் இருப்பதாகவும், மக்களாட்சி முறை கற்றவர்கள்தான் நாமும் என்று!

பிரதமர் கனம் குமாரசாமியார், ஒரு நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் எடுத்துக் காட்டிய குற்றங்களுக்கே, மறுத்துக் கூற முடியாமல், திக்குமுக்காடிப்போய், பேசாமடந்தையாகிவிட்டிருக்கிறாரே, பொது மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக் குரல்கிளம்புமானால், இந்தக் கனம் மண் பொம்மையாவாரோ—மரக் கட்டையாவரோ-நாம் அறியோம்! அந்த நாள் அதிகத் தொலைவிலும் இல்லை.

பொது மக்களுக்குள்ள வாட்டம் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் மனப்போக்கிலும் புதிய நிலை—புரட்சிகரமான தன்மையில் உருவாகத்தான் உருவாகும். இதனைத் தடுத்துவிட மௌனத்தாலும் முடியாது; தனது பொறுப்பையும் கடமையையும் மறந்து மக்களைத் திரும்பத் திரும்பப் பழிப்பதாலும் முடியாது. கனம் கோபாலர் பெருமையாகக் கூறியிருப்பது போல், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர் புரிந்த தியாகம் தீர்ந்து போய்விடவில்லை—அந்தப் பண்பு பட்டுப்போய்விடவில்லை. இந்த நாட்டு மக்களிடம், அது இன்னும் வற்றாத ஊற்றாகத்தான் இருக்கிறது. அந்த வீரப் பண்பும், போர்புரியும் ஆற்றலும் நாட்டு வளத்தை நாசமாக்கிவரும் இந்த நாடாளும் நல்லதம்பிகள் மீது திரும்பத்தான் போகிறது விரைவில்!

புகழ்ந்தால் போற்றுவர்—கண்டித்தால் கலங்குவர்-அதட்டிக் கேட்டால் பேசாமடந்தையாவர்! இது அரசியல் கலை அல்ல—ஆஷாட பூதித்தனம்! இதற்கு முடிவு ஏற்படத்தான் ஏற்படும், மக்கள் உண்மை நிலையை உணர்ந்தால்! மக்களை விழிப்புறச் செய்வதே, நமது நீங்காக் கடமை—உடனாற்ற வேண்டிய பணி.

ஏஜெண்டுகள் தேவை

கும்பகோணம், தஞ்சாவூர், கரூர், பழனி, மாயவரம், போளூர், ராசிபுரம், டால்மியபுரம், உதகை, காரைக்குடி. வத்தலக் குண்டு, துறையூர், அரக்கோணம் ஆகிய ஊர்களில் 'போர்வாள்' விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர்,
போர்வாள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காண்பது என்ன? அமைச்சர்களுக்கு நல்வரவு கூறிவரும் மக்களின் தொகை எவ்வளவு இருக்கும்? பழைய உற்சாகம்—ஆரவாரம்—'ஜே' கோஷம், அத்தனையும் பொதுமக்களை விட்டு ஏன் போயின? — எங்கே போயின?—யார் பொறுப்பாளி அதற்கு?—கூடும் சில மக்களின் முகங்களில்சஞ்சலமும்விழிகளில் வேதனையும், சொற்களில் சோர்வும், செயலிலே சலிப்பும், நடையிலே தளர்ச்சியும் இருக்கிறதே, அது ஏன்—ஏன் என்று எண்ணிப் பார்த்ததுண்டா இந்தக் கண்ணியமான கனவான்கள்? அந்த நாள் பளபளப்பு மங்கி, கனங்களின் ஆட்சியிலே, மக்களின் முகங்களில் காரிருள் கவ்விக்கொண்டு, கண்கள் குருதியைச் சொரிகின்றனவே, கண்டதுண்டா இந்த அலங்கோலத்தை கனங்கள்? அவர்கள் என்ன நம்போன்ற சாதாரணக் குடிமக்களா, இதையெல்லாம் பொருட்படுத்த—அவர்கள்தான் கனங்கள் ஆகிவிட்டனரே, அவர்கள் காணவேண்டியதும் — கண்டு களிக்கவேண்டியதும் வேறு எவை எவையோ இருக்கின்றனவே; அவர்களால் எப்படிக் காணமுடியும், பொதுமக்கள் முகம் எடுத்தியம்புவதையும், விழி கூறுவதையும்?

* * *

"எப்படிப் பேசுவது? ஒவ்வொரு சொற்களும் குத்தீட்டி போல் செவிகளில் பாய்கிறதே! குறைபாடுகளையா எடுத்துக்காட்டினார், எங்கள் மீது குற்றப் பத்திரிகை அல்லவா வாசித்திருக்கிறார்? தேவைகளையா தெரிவித்தார், திட்டவட்டமாக வல்லவா திட்டுகிறார்? எப்படிப் பேசுவது?"

"வரவேற்பா அளிக்கிறார், வம்புக்கல்லவே எங்களை இழுக்கிறார்? வாழ்த்துதலா புரிகிறார், வஞ்சமல்லவா தீர்க்கிறார் விருந்தா தருகிறார், விஷமல்லவா இடுகிறார்?"

"பொதுக் கூட்டமா போடுகிறார், பொதுஜன விரோதத்தையல்லவா ஏவுகிறார்? புத்தியா புகட்டுகிறார், எங்கள் நாணயத்தையல்லவா இழித்துக் கூறுகிறார்? கண்டிக்கவா செய்கிறார், கிண்டல் அல்லவோ புரிகிறார்?"

மேற்கூறி இருப்பதுபோல், எவரும் மனதுக்குள் நினைத்து நினைத்து, நெஞ்சு புண்ணாகித்தான் இருப்பர், வரவேற்பளிப்பதாக ஒருவரை அழைத்து, அவருக்கு முன்னால், அவர் செய்துவரும் தவறுகளை அடுக்கடுக்காக எடுத்துக் காட்டினால்! எடுத்துக் காட்டப்பட்ட, பிழைகளின் பட்டியல் ஒன்று இரண்டாக இருந்தாலும், பாதகமில்லை, அவைகளுக்கு மட்டுமாவது ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயலலாம். ஆனால் முழுக்க முழுக்கக் குற்றச் சாட்டுகளாகவே இருந்தால், என்ன பதில் கூறுவது அனைத்துக்கும்? பதில் கூறமுடியாத நிலையில், எதனைத்தான் பேச இருக்கிறது? எனவே, பேசாமடந்தையானார் ஒரு பெரியவர்—கனம்!

தாம் செய்ததாகச் சொல்லப்படும் சில தவறுகளை, தம் முகத்துக்கு முன்னாலேயே, ஒருவர், அதுவும் சேர்ந்தக் கட்சியினர், அதிலும் தம் அந்தஸ்திலும் மிகமிகத் தாழ்ந்த அந்தஸ்த்தில் உள்ள ஒருவர், அதுவும் நயமான வார்த்தைகளால் கூறாமல், கர்ண கடூரமான சொற்களால் இடித்து இடித்துக் காட்டும்பொழுது, எவருக்கும் கோபமும்—குழப்பமும் பிறப்பது இயல்புதானே? வாழ்த்திடப்போகிறேன் என்று அழைத்து, சுவை சொட்டச் சொட்ட வசைவிருந்து அளித்தால், அதுசமயத்தில் அந்த விருந்தினர் முகவிலாசம் எவ்வளவு தேஜோமயமான காட்சியாக மாறி இருக்கும் என்பதை நீங்களும் நாமும் காணும் பேறு பெற்றிலோம்! ஆனால் கண்டிட முடியும் நம் மனக் கண்ணால்! நினைத்துப் பாருங்கள் அக்காட்சியை ஒரு கணம்!

- **பொது ஜனக் கருத்தை அவமதித்து நடக்கிறார்கள்.**
- **நகரத்தைச் சிறப்பித்துக் கிராமத்தைப் புறக்கணிக்கிறார்கள்.**
- **உணவுக் கட்டுப்பாட்டால் கள்ளச் சந்தையும், லஞ்சமும் உச்சத்தில் இருக்கின்றன.**
- **வெளிப்படையாக ஒன்றைச் சொல்லுகிறார்கள், சென்னைக்குத் திரும்பினதும் முரண்பாடாக நடந்துகொள்கிறார்கள்.**
- **மனுக்களைக் கழிவுக்கூடையில் போட்டு விடுகிறார்கள். அது கூடாது.**
- **போலீஸ் சிப்பாய்கள் வெளியூர்களுக்குச் சென்றால், நாள் ஒன்றுக்கு 12-அணா படி அளிப்பது போதியதாக இல்லை.**

இவைகள்தான் குற்றச்சாட்டும், தேவைகளும்! மாற்றுக் கட்சியினர் புனைந்த புகழ்மாலை அல்ல இது. சொந்தக் கட்சியினர், மனமுவந்து தந்த, நல்வரவேற்பு இதுவாகும்.

இத் திங்கள் ஓராந்தேதி, நமது பிரதமர் கனம் குமாரசாமியாருக்கு, கர்நூல் நகரில், நகர காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில், அக்காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் தோழர் வெங்கடப்பா அவர்களால், முன் குறிப்பிட்டுள்ள உபசார மொழிகள் வழங்கப்பட்டுள்ளன. சில நாளைக்கு முன்னால், அகில இந்திய காங்கிரஸ் தலைவர், டாக்டர் பட்டாபியார் குறிப்பிட்டார், காங்கிரஸ் மந்திரிகளைக் குறை கூறுபவர்கள்

எல்லாம், ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் செல்வப் பிள்ளைகளாக இருந்தவர்கள் என்று! இதோ ஒரு காங்கிரஸ் பிரதமரின் முன்னிலையிலேயே, ஒரு காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில், காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலத்தை, ஒரு நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரே கண்டிக்கிறார், காரசாரமாக, ஒளிவு மறைவு இல்லாமல்! இதற்குப் பட்டாபியார், பதிலென்று, என்ன புது தத்துவத்தை விளக்கமாகத் தர இருக்கிறாரோ? வேலூர் சிறை நாணயஸ்தரா, இதற்கு விளக்கமுரைக்க முடியாமல் திணறப் போகிறவர்!

குற்றங்களில் உண்மை இருக்கிறதா இல்லையா, குறிப்பிட்டிருப்பதெல்லாம் வெறும்பழிச் சொற்கள் தானா, என்பனபற்றி எல்லாம் நாம் கவலை கொள்ளத் தேவை இல்லை. அந்தப் பொறுப்பை நமக்கு கனம் பிரதமர் விட்டுவிடவுமில்லை. கர்நூல் நகர காங்கிரஸ் கமிட்டி செயலாளர் எடுத்துக் கூறியுள்ள குற்றங்களை எல்லாம், அதே இடத்தில் பிரதமர் மறுத்துக் கூறி இருக்கவேண்டும். ஆனால், பிரதமர் அதனைச் செய்யத் தவறிவிட்டார். எதிர்பாரா முறையில், நிகழ்ந்துவிட்ட சம்பவத்தைக் கண்டு எப்படி இருந்ததோ பாபம் பிரதமரின் நிலை! குற்றங்களுக்கு இரண்டொரு சொற்களால் ரத்தினச் சுருக்கமாகப் பதில் கூறிவிட்டு, பேசாமடந்தையாகி விட்டார். பிரதமரின் பதில், எடுத்துக்காட்டப் பட்ட குற்றங்களின், உண்மை இன்மைகளை விளக்குவதாக இல்லை. குற்றங்களைக் கேட்டு, தான் பெற்றுள்ள மனக்குழப்பத்தையே விளக்குவதாக இருக்கிறது பிரதமரின் கூற்று! அதாவது "கொடுத்தமனு என்னை தனித்த முறையில் அவமதிப்பதாகவும், செயலாளரின் பேச்சு சர்க்கார் செயலைக் கண்டிப்பதாகவும் இருப்பதால், நானெதுவும் பேச விரும்பவில்லை" என்று கூறி பேசா நோன்பு பூண்டார் நமது பிரதமர்!

குற்றங்களை மறுக்கவில்லை பிரதம மந்திரி. எனவே, செயலாளர் சுட்டிக் காட்டிய குற்றங்கள் அனைத்தும் உண்மையானவைதான் என்பதை பிரதமர் மௌனத்தால் ஒப்புக் கொண்டார் என்றுதான் தீர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது.

குற்றமிழைத்தவர், குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டு, புரிந்த குற்றங்களை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கிக் காட்டப் பட்ட பின்னர், குற்றவாளி வாய்திறக்கவும் வகையற்று விழித்து நிற்கும் நிலையில், குற்றவாளியின் வக்கீல், ஏதாவது பேசித்தொலையவேண்டிய கட்டாயத்திற்காக, கடமையை நிறைவேற்றுவதுபோல், நமது நிதிமந்திரி கோபாலர் நிலைமையைச் சமாளிக்க சாமர்த்தியமாக இரண்டொரு வார்த்தைகளை எடுத்துவீசினார். குற்றங்களை, அந்த வாசகங்களும் மறுப்பதாக இல்லை. அமைச்சர்கள் மீது ஏற்றிக் கூறப்பட்ட இழிவுகளை, மக்கள் அனைவர் மீதும் அஞ்சா நெஞ்சுடன் ஏற்றிவிட்டு, கனம் கோபாலர் மனச்சாந்தி பெற முயலுகிறார். அவர் தந்த பொன்மொழிவருமாறு:—

"அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒழுங்கீனர்களாக இருக்கிறார்கள் என்று பொதுவாக பேசிக்கொள்ளப்படுகிறது; ஆனால், யார்தான் ஒழுங்கீனர்களாக இல்லாமல் இருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். ஒவ்வொருவரும், ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் ஒழுங்கீனர்களாகவே இருக்கிறார்கள்."

"எல்லா மக்களும், எல்லாத் துறையிலும் ஒழுங்கீனர்களாகவே இருகிறார்களாம்"—மந்திரிகள் அனைவரும் உள்படத்தான்—கனம் கோபாலர் கூறுகிறார் நெஞ்சுத் துணிவோடு இவ்வாறு. இவரை அமைச்சராக

(10-ம் பக்கம் பார்க்க)

திருக்குறளைப் பற்றிய அருமையான புத்தகங்கள்

திருக்குறள் (குழந்தையுரை)	4	0
திருக்குறள் (ந. சி. க.)உரை	4	0
திருக்குறள் ஆராய்ச்சி	1	8
வள்ளுவர் சொள்கையும் வடவர் கொள்கையும்	1	0
புதுமைக்குறள்	1	0
தலைமைத் திருக்குறள்	0	8
திருக்குறள் மூலமும் தெளிவுரையும் (மு. வரதராஜன்)	1	4
திருவள்ளுவர்	0	8
திருக்குறள் பொழிப்புரை	2	8

* * *

தமிழ்ப் பணி	0	12
தனித்தமிழ்க் கிளர்ச்சி	0	5
தொழிலாளர் விழிப்பு	0	5
பாட்டாளி	0	8
கொடு கல்தா	0	8
இந்துமத ஆசார ஆபாச தரிசனி	2	8
திராவிடநாட்டுப் பாடல்கள்	0	6
அவள் வாழ்வு (ஆசைத்தம்பி)	0	8

(தபால் செலவு தனி)

பகுத்தறிவுப் பாசறை
147. பவழக்காரத்தெரு,
சென்னை 1.

ஈரோட்டில் "போர்வாள்"
விற்பனையாளர் :
தோழர்: இரா. பெருமாள்,
வளையற்காரத் தெரு,
ஈரோடு

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)